**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 87 of 2022**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தனபால் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present)**

**Dated.03.02.2024.**

**முதல் விசாரணை**

நான் கீழ வாளாடியில் வசித்து வந்து, இலால்குடி அரசு மருத்துவமனையில் உதவியாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது மகள் சாட்சி குளோரி ஸ்டெல்லா டைலரிங் கடை வைத்து தொழில் செய்து வருகிறார். எனது மகளின் கடைக்கு அருகில் 1ம் எதிரியானவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். எதிரிகள் இருவரும் எனக்கு மனை வாங்கி கொடுத்தார்கள். எதிரிகளிடம் அந்த இடத்தில் வீடு கட்டி தருமாறு கேட்டோம். அதன்பேரில் நான் 1ம் எதிரியிடம் ரூ.24,00000 க்கு அக்ரிமென்ட் போட்டுக் கொண்டோம். ரூ.1635000 பணத்தை 1ம் எதிரியிடம் கொடுத்தேன். வீடு ஒட்டும் அளவிற்கு வந்தபிறகு மீண்டும் 1ம் எதிரியானவர் பணம் கேட்டார். மீண்டும் அவரிடம் ரூ. 50000 பணம் கொடுத்தேன். மீண்டும் பணம் பத்தாது

என்பதால் எனது மகன் பிரான்சில் ஆனந்த் என்பவரிடம் ரூ.600000 எனக்கு தெரியாமல் 1ம் எதிரியானவர் வாங்கினார். அதை அறிந்த நான் 1ம் எதிரியிடம் எனக்கு தெரியாமல் எனது மகனிடம் ஏன் பணம் வாங்கினீர்கள் என்று கேட்டேன். உங்களிடம் வாங்கிய பணத்தில் நான் வேறு இடம் வாங்கிவிட்டேன். உங்களிடம் பணம் இருந்தால் கட்டிடத்தை ஒட்டிக் கொள்ளலாம் என்று கூறினார். மீண்டும் ரூ.125000 பணம் கட்டிடம் கட்டுவதற்காக 1ம் எதிரியிடம் கொடுத்தேன். அதன்பிறகு 1ம் எதிரியானவர் கட்டிடத்தை கட்டாமல் நிறுத்திவிட்டார். பின்னர் 24.03.2022ம் தேதி மதியம் 2.15 மணியளவில் எனது மகள் 1ம் எதிரியிடம் பணத்தை வாங்கிகொண்டு ஏன் பணத்தை வாங்கிகொண்டு வேலை செய்யாமல் இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, 1ம் எதிரியானவர் எனது மகளை தேவடியா சிறுக்கி புண்டாமவளே நீ யாருடி என்ன கேட்குறதுக்கு உன் அப்பனை வர சொல்லு என்று திட்டியதாக எனது மகள் போன் மூலமாக எனக்கு தகவல் கூறினார். நான் சம்பவ இடத்திற்கு வந்து 1ம் எதிரியிடம் என் மகளிடம் ஏன் தகறாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, 2ம் எதிரியானவர் ரீப்பர் கட்டையால் இடது கையின் பின்புறம் அடித்தார். சுண்ணாம்பு கல்லை எடுத்து எனது தலையில் போட்டார். 2ம் எதிரியானவர் எனது மகளை கீழே தள்ளி கையை முறுக்கி அடித்தார். அதன்பிறகு நானும் எனது மகள் குளோரி ஸ்டெல்லாவும் சிகிச்சைக்காக இலால்குடி அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். அதன்பிறகு போலீசார் இரண்டு தினங்கள் கழித்து விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>

நான் இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக காவல் நிலையம் சென்று

புகார் கொடுத்தேனா என்றால் இல்லை நேரடியாக மருத்துவமனை சென்றேன். நான் கைப்பட புகாரை எழுதிக் கொடுத்தேனா என்றால் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் பெற்றனர். நான் இலால்குடி அரசு மருத்துவமனையில் சுமார் 2.30 மணிக்கு சிகிச்சைக்கு சென்றேன். நான் மருத்துவரிடம் இரயில்வே க்ராசிங் அருகே தெரிந்த 2 ஆண்கள் குச்சியால் அடித்தாக சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். 24.03.2022 அன்று எனது மகள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. எனக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி பணப் பரிவர்த்தனை அனைத்தும் எனக்கும் 1ம் எதிரிக்கும் மட்டுமே ஏற்பட்டது. எனக்கு தெரியாமல் எனது மகனிடம் எதிரி பணம் பெற்றுள்ளார். எதிரிகள் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் 24.03.2022 அன்று சிகிச்சைக்கு சேர்ந்த விவரம் எனக்கு தெரியாது. எதிரியின் கடையை நாங்கள் 24.03.2022 அன்று பூட்டிவிட்டோம் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன்பேரில் இந்த நீதிமன்றத்தில் நான் ஆஜராகி உள்ளேன் என்றால் சரிதான், அந்த வழக்கில் நான் முன்பிணை பெற்றுள்ளேன். அந்த வழக்கில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது, எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். 24.03.2022ம் தேதி போலீசார் எனது மனைவியிடம் சென்று என்னை பற்றி விசாரித்த விவரம் தெரியும், நான் அப்போது மருத்துவமனையில் இருந்தேன். போலீசார் எனது மனைவியை விசாரித்த விவரம் எனது மனைவியிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் தெரிந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நாங்கள் இருவரும் தான் புகார் கொடுத்தோம். எனது மகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளது, நான் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது, தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ஒப்பந்தம் போட்ட இடமானது எனது பேரில் உள்ளது. பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் எதிரிகளுக்கும் எனது மகனுக்கும் இடையே வங்கி பரிவர்த்தனை மூலம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மகனுக்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட வங்கி பரிவர்த்தனை விவரம் முதலில் எனக்கு தெரியாது. பின்னிட்டு எனது மகன் சொல்லி எனக்கு தெரியும். 24.03.2022 அன்று சுமார் 1.45 மணிக்கு 1ம் எதிரி கடையின் முன்பு போலீசார் நின்ற விவரம் எனக்கு தெரியாது. 24.03.2022 ம் தேதி அன்றே போலீசார் எங்களை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர் என்றால் சரிதான். 27.03.2022 ம் தேதி நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை, 27.03.2022 ம் தேதி போலிசார் என்னை விசாரித்தனரா என்றால் விசாரித்தனர். 24.03.2022 அன்று மாலை போலீசார் என்னை விசாரித்தனர் என்று எனக்கு ஞாபகமில்லை. அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட பின்பு டிஸ்ஜார்ஜ் செய்யப்படும் வரை வெளியில் வருவதற்கு அனுமதி கிடையாது என்ற விவரம் எனக்கு தெரியும். நானும், எனது மகளும் இலால்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட வில்லை என்றும், உள்நோயாளியாக இல்லாதபட்சத்தில் உள்நோயாளியாக இருந்ததாக நான் அரசு மருத்துவமனையில் ஏற்கனவே பணிபுரிந்ததை சாதகமாக பயன்படுத்தி உள்நோயாளியாக இருந்ததது போல ஒரு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அன்றைய தினம் 12.45 மணிக்கு எதிரியை கடையில் வைத்து பூட்டிவிட்டேன் என்றும், 2.45 மணி வரை போலீசார் அங்கு இருந்தனர் என்றும், நான் அங்கு இருந்தால் போலீசார்

என்னை கைது செய்துவிடுவார்கள் என்று மருத்துவமனையில் இருந்தது போல மாயமான தோற்றத்தை வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஏற்பாடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது அதன் விவரம் என்னவென்று எனக்கு தெரியும். போடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டுமானம் முடிக்கப்பட்டது என்றும் நாங்கள் தான் ரூ.975000 கொடுக்க வேண்டும் என எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட விவரம் எனக்கு தெரியும். நான் சம்பவ தினத்தன்று வழக்கு சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு பணம் கொடுப்பதிலிருந்து எதிரிகளை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக சம்பவ இடத்தில் இல்லாமலேலே இருந்ததாகவும், எதிரிகள் காயப்படுத்தியதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் மீது 24.03.2022 அன்று புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். பணம் மற்றும் புகாரில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், எதிரியை வைத்து பூட்டிவிட்டதால் தன் மீது வழக்கு போட்டுவிடுவார்கள் என்று நடக்காகத சம்பவத்தை நடந்ததாக கூறி புகார் மனு அளிக்காமலேயே புகார் குறித்த எந்த விவரங்களையும் தெரிந்து கொள்ளாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 87 of 2022**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அருண் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present)**

**Dated.03.02.2024.**

**முதல் விசாரணை**

நான் கீழ வாளாடியில் வசித்து வந்து மர வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 24.03.2022 ம் தேதி மதியம் 2.15 மணியளவில் 1ம் எதிரியானவர் குளோரி ஸ்டெல்லாவின் கடையின் முன்பு வந்து அவரை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றால் எனக்கு தெரியாது. தகவல் கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு வந்த அ.சா.1 ஆனவர் 1ம் எதிரியை பார்த்து ஏன் இப்படி என் மகளை தரக்குறைவாக திட்டுன என்று கேட்டபோது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது

என்றால் சரியல்ல. 1ம் எதிரியானவர் குளோரி ஸ்டெல்லொவை பார்த்து உன்னை நான் திட்டினால் எதுக்குடி உன் அப்பன் என்கிட்ட வந்து கேட்குறான் என்று குளோரி ஸ்டெல்லா கையை பிடித்து முறுக்கி அடித்தார் என்றால் சரியல்ல. குளோரி ஸ்டெல்லாவை அடிப்பதை தடுக்க வந்த அவரை அவரது அப்பாவை 2ம் எதிரியானவர் கீழே கிடந்த ரீப்பர் கட்டையை எடுத்து கை மற்றும் முதுகில் அடித்து கீழே தள்ளி கீழே கிடந்த சுண்ணாம்பு கல்லை எடுத்து அ.சா.1யை தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. ஒழுங்கா இருந்துகோங்க இல்லனா காலி பன்னிடுவேன் என்று மிரட்டி எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து கிளம்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. காயம்பட்ட இருவரும் சிகிச்சைக்காக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி விஷயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)–இல்லை**</u>

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 87 of 2022**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : குளோரி ஸ்டெல்லா | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present)**

**Dated.03.02.2024.**

முதல் விசாரணை

நான் வாளாடியில் வசித்து வந்து டெய்லராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது கடையில் இருந்து 3 கடை தள்ளி 1ம் எதிரியானவர் கட்டிடம் கட்டி தரும் வேலை செய்து தருவதற்கான அலுவலகத்தை நடத்தி வருகிறார். எனது அப்பாவிற்கு 2ம் எதிரியானவர் இடம் வாங்கி கொடுத்தார். அ.சா.1 1ம் எதிரியிடம் வீடு கட்டி தருமாறு கேட்டார். அதன்பேரில் அ.சா.1 1ம் எதிரியிடம் ரூ.2400000 ற்கு அக்ரிமென்ட் போட்டு ரூ.1635000 எனது அப்பா கொடுத்தார். வீடு ஒட்டும் அளவிற்கு வந்தபிறகு 1ம் எதிரியானவர் எனது அப்பாவிடம் மீண்டும் பணம் கேட்டுள்ளார். அ.சா.1 ரூ.50000 பணம் 1ம் எதிரியிடம் கொடுத்தார். 1ம் எதிரியானவர் எனது தம்பி பிரான்சிஸ் ஆனந்த் என்பவரிடம் ரூ.600000 பணம் வேண்டுமென்று கேட்டதால் அவர் கொடுத்துள்ளார். நான் 1ம் எதிரியிடம் கடந்த

24.03.2022ம் தேதி மதியம் 2.15 மணியளவில் எனது தம்பியிடம் ரூ.600000ம் எனது அப்பாவிடம் ரூ.50000 பணம் வாங்கி கொண்டு ஏன் வீட்டு வேலைகளை செய்யாமல் நிறுத்தி வைத்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு 1ம் எதிரியானவர் என்னை பார்த்து தேவடியா, புண்டாமவளே என்று அசிங்கமாக திட்டினார். நான் எனது அப்பாவிடம் மேற்படி விஷயத்தை போன் மூலமாக சொன்னேன். அதன்பிறகு சம்பவ இடத்திற்கு அ.சா.1 வந்தபிறகு 1ம் எதிரியிடம் ஏன் என் மகளிடம் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1ம் எதிரியானவர் எனது அப்பாவை பார்த்து தேவடியா மவனே நீ என்ன பணத்தை கேட்குறது என்று திட்டினார். 1ம் எதிரியானவர் என்னை தோள்பட்டையில் கையால் அடித்தார். எனது அப்பாவை ரீப்பர் கட்டையால் 2ம் எதிரியானவர் முதுகில் அடித்தார். அதில் எனது அப்பா கீழே விழுந்தபோது அருகிலிருந்த சுண்ணாம்பு கல்லை எடுத்து 2ம் எதிரியானவர் எனது அப்பாவின் மீது போட வந்தபோது எனது அப்பா நகர்ந்து கொண்டார். காயம்பட்ட நாங்கள் சிகிச்சைக்காக இலால்குடி அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் உத்தமர்சீலியில் எனது கணவருடன் வசித்து வந்தேன். தற்போது எனது தகப்பனாருடன் வசித்து வருகிறேன். எனக்கும் எனது

கணவருக்கும் எந்த விரோதமும் இல்லை ஒற்றுமையாக தான் இருந்து வருகிறோம். எனது கணவர் திருச்சி பால்பண்ணையில் வேலை செய்து வருகிறார். திருமணம் ஆனதிலிருந்து எனது கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன். நான் சாட்சி சொல்ல வந்ததை எனது கணவரிடம் சொல்லிவிட்டு தான் வந்தேன். 24.03.2022 ல் நடந்த வழக்கு சம்பவ ம் தொடர்பாக அன்றைய தினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன் அன்றைய தினமே போலீசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். நான் எனது கைப்பட எழுதி புகார் கொடுத்திருந்தேன். நான் 24.03.2022 ல் கொடுத்த புகாரின் பேரில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 24.03.2022 ம் தேதி நான் மாலை 05.30 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்மீதும் என் தகப்பானார் மீதும் 1 ம் எதிரி கொடுத்த புகாரின்பேரில் வழக்க பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும். 24.03.2022 ம் தேதி சுமார் 1 மணியளவில் எனது தகப்பனார் 1 ம் எதிரியை அவருடைய கடைக்குள் வைத்து பூட்டிய பின்பு அருகிலிருந்தவர்கள் 100 க்கு போன் செய்து போலீசார் வந்து 1 ம் எதிரியை மீட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. எதிரிகள் எங்களை தாக்கிய பிறகு எனது கடையின் பூட்டை எடுத்து 2 ம் எதிரி 1 ம் எதிரியை உள்ளே வைத்து பூட்டிவிட்டு 100 க்கு போன் செய்து எனது தம்பி பூட்டிவிட்டதாக சொன்னதன்பேரில் போலீசார் எனது அம்மா வீட்டிற்கு சென்றார்கள். 100 க்கு செய்யப்படும் போன் பதிவு செய்யப்படும் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது தகப்பனார் இலால்குடி அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தார். நாங்கள் இலால்குடி அரசு மருத்துவமனையில் 2.35 மணிக்கு சிகிச்சைக்கு சென்றோம். நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு

சேர்ந்தபிறகு வெளியில் வரவில்லை, மாலை 5.30 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். காவல் நிலையத்திற்கு நான் மட்டும் தான் சென்றேன் எனது தகப்பனார் வரவில்லை. நான் காவல் நிலையத்தில் சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக இருந்தேன். எனது தகப்பானாரிடம் மருத்துவர் என்ன விசாரித்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது தகப்பானார் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்ததை தனக்கு சாதாமாக பயன்படுத்தி உள்நோயாளியாக 24.03.2022ல் இருந்து 30.03.2022 வரை அனுமதிக்கப்பட்டிருப்பதாக விபத்து பதிவேடு பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் உள்ள குறிப்புகளை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என சாட்சியத்தின் மூலம் தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் நான் சிகிச்சையில் அனுமதிக்கப்படும்போது 2 ஆண்கள் குச்சியால் இரயில்வே க்ராசிங் அருகில் அடித்தாக தான் மருத்துவரிடம் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. 1ம் எதிரி கொடுத்த புகாரின்பேரில் முதல்முதலில் எங்கள் குடும்பத்தார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் எதிரியை அவரது கடைக்குள் வைத்து 12.45 முதல் 2.45 வரை எனது தகப்பானார் பூட்டிவிட்டு சாவி எடுத்து சென்றுவிட்டார் என்றும், எனது தகப்பனாரை தேடி போலீசார் அங்கு வந்து எனது தாயாரிடம் விசாரித்த விவரம் எனக்கு தெரியாது. அதன்பிறகு அருகிலிருந்தவர்கள் 1ம் எதிரி உள்ளே இருந்த கடையை பூட்டை போலீசார் முன்னிலையில் உடைத்து எதிரியை மீட்ட விவரம் எனக்கு தெரியாது, ஆனால் கடையின் உரிமையாளர் எனக்கு போன் செய்து எதிரியின் கடையை பூட்டிவிட்டு சென்றுவிட்டார்களாமே என்று கேட்டதற்கு நாங்கள் பூட்டவில்லை நான் மருத்துவமனையில்

இருக்கிறேன் என்று சொன்னேன். எனது அப்பா புகார் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. எங்களது  கட்டிட வேலை சம்மந்தமாக ஏற்கனவே 4, 5 முறை 1ம் எதிரி கொடுத்த புகாரின் பேரில் போலீசார் எனது தகப்பானரையும், எனது தம்பியையும் விசாரித்த விவரம் எனக்கு தெரியாது. எதிரிகளுடன் போடப்பட்ட கட்டுமான ஒப்பந்தத்தின் விவரங்கள் எனது அப்பா சொல்லி எனக்கு தெரியும். போடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டுமானம் முடிக்கப்பட்டது என்றும் நாங்கள் தான் ரூ.975000 கொடுக்க வேண்டும் என எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட விவரம் எனக்கு தெரியும். எதிரிகளுக்கு வங்கி பணம் பரிவர்த்தனை மூலம் தான் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும். கையிலும் பணம் கொடுக்கப்பட்டது. நான் சம்பவ  தினத்தன்று வழக்கு சம்பவ இடத்தில் இல்லை என்றும், எனது தகப்பானருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு பணம் கொடுப்பதிலிருந்து தப்பிப்பதற்காக சம்பவ இடத்தில் இல்லாமலேலே இருந்ததாகவும், எதிரிகள் காயப்படுத்தியதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/—செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 87 of 2022**

**Prosecution Witness : PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : நசீர் அகமது | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present)**

**Dated.03.02.2024.**

**முதல் விசாரணை**

நான் பச்சாம்பேட்டை வளைவில் வசித்து வந்து பழைய இரும்பு கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1, 3 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 24.03.2022 ம் தேதி மதியம் 2.15 மணியளவில் 1ம் எதிரியானவர் குளோரி ஸ்டெல்லாவின் கடையின் முன்பு வந்து அவரை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றால் எனக்கு தெரியாது. தகவல் கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு வந்த அ.சா.1 ஆனவர் 1ம் எதிரியை பார்த்து ஏன் இப்படி என் மகளை தரக்குறைவாக திட்டுன என்று கேட்டபோது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது

என்றால் சரியல்ல. 1ம் எதிரியானவர் குளோரி ஸ்டெல்லொவை பார்த்து உன்னை நான் திட்டினால் எதுக்குடி உன் அப்பன் என்கிட்ட வந்து கேட்குறான் என்று குளோரி ஸ்டெல்லா கையை பிடித்து முறுக்கி அடித்தார் என்றால் சரியல்ல. குளோரி ஸ்டெல்லாவை அடிப்பதை தடுக்க வந்த அவரை அவரது அப்பாவை 2ம் எதிரியானவர் கீழே கிடந்த ரீப்பர் கட்டையை எடுத்து கை மற்றும் முதுகில் அடித்து கீழே தள்ளி கீழே கிடந்த சுண்ணாம்பு கல்லை எடுத்து அ.சா.1யை தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. ஒழுங்கா இருந்துகோங்க இல்லனா காலி பன்னிடுவேன் என்று மிரட்டி எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து கிளம்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. காயம்பட்ட இருவரும் சிகிச்சைக்காக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி விஷயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)–இல்லை**

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.